RTROP.No.306/2022 – 23.09.2024

CW1 – துரைசாமி

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் எங்கே உள்ளது என்றால் எடப்பாடி தாலுகா எருமப்பட்டி கிராமத்தில் உள்ளது. ஓமலூரிலிருந்து சங்ககிரி திருச்செங்கோடு வழியாக பரமத்தி வரை செல்லும் மாநில நெடுஞ் சாலைக்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரி. எங்கள் நிலம் ரோடு ஓரமாக இருந்ததா என்றால் எனது நிலம் ஓமலூர்–சங்ககிரி ரோட்டில் இருந்தது. 4 வழி சாலைக்காக அது ஆர்ஜிதம் செய்யப்பட்டது. அந்த இடத்தில் எனக்கு 8400 சதுரடி நிலம் உள்ளது. அந்த நிலம் Ex.C3 கிரயப்பத்திரத்தில் புஞ்சை ஏக்கர் 1.03–3/4 நிலம் என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் சதுரடி 8400 சதுரடி மட்டும் நான் கிரயம் பெற்றேன் என்றால் சரி. அந்த பத்திரம் மூலம் ரூ.2,90,000/– க்கு நான் கிரயம் பெற்றேன் என்றால் சரி. மேற்படி நிலத்தை விவசாய நிலமாக பயன்படுத்தி வந்தேன் என்றால் காலி நிலமாக பயன்படுத்தி வருகிறேன். அதில் கட்டிடம் ஏதும் கட்டவில்லை என்றால் சரி. வாங்கும்போது விவசாய நிலமாக வாங்கினேன் என்றால் சதுரடி கணக்கிட்டு வாங்கினேன். மனை நிலம் என்பதற்கு அங்கீகாரம் உள்ளதா என்றால் இல்லை.

மேற்படி நிலம் ஆர்ஜிதம் செய்யப்படும் முன்னர் வரை விவசாயத்திற்குதான் பயன்படுத்தி வந்தேன் என்றால் சரியல்ல. எவ்வளவு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சர்வே எண்.197/1 ஏ 1–யில் 54 சதுர மீட்டர் ஆர்ஜிதம் செய்யப்பட்டது.

தற்போது அமைக்கப்பட்ட புதிய 4 வழி சாலையிலிருந்து என்னுடைய நிலத்திற்கு நேரயடியாக செல்ல முடியும் என்றால் சரி. ரோடு அமைக்கப்பட்டதால் என்னுடைய நிலத்தின் மதிப்பீடு அதிகமாகி உள்ளது என்றால் இல்லை. நிலத்திற்கு மதிப்பீடு அதிகமாக கொடுக்க வேண்டும் என்பதற்காக பக்கத்தில் உள்ள நிலங்களின் மதிப்பீட்டை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ளேன். நான் எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும் தாக்கல் செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய நிலம் கிரயம் செய்யும்போது சதுரடி என்ன விலைக்கு வாங்கப்பட்டது என்று கிரயப்பத்திரத்தில் எழுதப்படவில்லை என்றால் சரி. நிலத்தை விவசாய நிலமாக வாங்கிக்கொண்டு எனது சுயதேவைக்காக சதுரடி நிலமாக எழுதிக்கொண்டேன் என்றால் சரியல்ல.

அருகில் உள்ள நிலங்கள் சதுரடி விலை மதிப்பில் உள்ளதாகவும், விலை அதிகமான மதிப்பீடு உள்ளதாகவும் எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யாமல் கோர முடியாது என்றால் சரியல்ல.

ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் ஆர்ஜித சமயத்தில் இருந்த மதிப்பீட்டை கணக்கிட்டும், அருகில் உள்ள மற்ற நிலங்களின் மதிப்பீட்டை கணக்கிட்டும் சரியான முறையில் இழப்பீடு நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

என்னுடைய நிலத்திற்கு அருகில் 1600 மீட்டர் நீள வாக்கில் உள்ள மற்ற நிலங்களின் விலை மதிப்பை கணக்கில் எடுத்துக்கொண்டு நிலத்தின் மதிப்பை நிர்ணயித்துள்ளார்கள் என்றும் எனவே நிலத்தின் மதிப்பை அதிகரிக்க அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் ஆதாரம் இல்லாமல் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal District Judge, Salem.